**மழைநீரை சேமிப்போம் !** **பிளாஸ்டிக்கைத் தவிர்ப்போம் !!**

நகராட்சி அலுவலகம்,
தேனி-அல்லிநகரம்.

நாள். 12.06.2018

## நகர்மன்ற அவசர கூட்ட அழைப்பிதழ்

நிகழும் திருவள்ளுவர் ஆண்டு 2048 ஆனி மாதம் 29ஆம் நாள் **12.06.2018 செவ்வாய்க்கிழமை** காலை 10.35 மணி அளவில் நகர்மன்ற அலுவலகத்தில் உள்ள கூட்ட மண்டபத்தில் நகர்மன்ற **அவசரக் கூட்டம்** நடைபெறும்.

**தனி அலுவலர் மற்றும் ஆணையர்(பொ)**
தேனி-அல்லிநகரம் நகராட்சி

## பொருள் 01:

தேனி - அல்லிநகரம் நகராட்சி வரி வாருவாயினை ரெுக்கிடும் வகையிலும் நகரின் வளர்ச்சிக்கு ஏற்ப மேற்குச்சந்தையில் அமைந்துள்ள நகராட்சிக்கு சொந்தமான காலியிடத்தில் கீழ்கண்டவாறு வணிக வளாகம் அமைத்திடவும் அதற்கான உத்சே மதிப்பீடு ரூ: 8.80 (ரூபாய்: எட்டு லட்டசத்து என்பது ஆயிரம் மட்டும்) மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண். | பணியின் பெயர் | மதிப்பீடு (தொகைரூபாய் லட்சத்தில்) |
|---|---|---|
| 1 | தேனி – அல்லிநகரம் நகராட்சி மேற்குச் சந்தையில் உள்ள காலியிடத்தில் 3 கடைகள் அமைத்தல் | ரூ. 8.80 |

அலுவலக குறிப்பு :-

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) மேற்கண்ட செலவினத்தை நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

இ) அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதை மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண். /2018/இ1)

**தீர்மான எண். 565 அ, ஆ மற்றும் இ. அனுமதிக்கப்பட்டது.**

## பொருள் 02:

தேனி – அல்லிநகரம் நகராட்சி மேற்குச் சந்தையில் உள்ள காலியிடத்தில் ரூ: 8.80 (ரூபாய்: எட்டு லட்டசத்து என்பது ஆயிரம் மட்டும்) மதிப்பீட்டில் 3 எண்ணம் வணிக கடைகள் அமைக்கும் பணிக்கு 08-06-2018 அன்று வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் விலைவிகதம் கீழ்க்கண்டவாறு உள்ளது.

| வ. எண். | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டு தொகை (ரூபாய்.) | ஒப்பந்தப்புள்ளி கோரிய தொகை (ரூபாய்.) | மதிப்பீட்டை விட கூடுதல் / குறைவு சதவீதம் |
|---|---|---|---|---|
| 1 | K.A.R. கண்ஸ்டிரக்ஸன்ஸ், தேனி. | ரூ: 7,80,259.06 | ரூ: 7,80,259.06 | 4.84% கூடுதல் |
| 2 | S.மாணிக்கம் | ரூ: 7,88,472.11 | ரூ: 7,88,472.11 | 5.95% கூடுதல் |

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளியில் குறைவான விலைவிகதம் கோரியுள்ள K.A.R. கண்ஸ்டிரக்ஸன்ஸ், தேனி.ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளி அலுவலக மதிப்பீட்டை விட 4.84 சதவீதம் கூடுதலாக உள்ளதால், விலைவிகிதத்தினை குறைத்து தர கோரியதில், வேலையாட்கள் மற்றும் தளவாட பொருட்களின் விலைவாசி உயர்வின் காரணமாக விலையினை குறைத்து கொடுக்க இயலாது என தெரிவித்துள்ளார்.

தற்போது நகராட்சியின் நிதி ஆதாரத்தினை பெருக்கிடும் வகையில் வணிக வளாகம் அமைத்திட வேண்டியதன் அவசியம் கருதி, தமிழ்நாடு நகராட்சி பொறியியல் கையேடு பத்தி 2.7.2-ன் படி அலுவலக மதிப்பீட்டினை விட 4.84 சதவீதம் கூடுதலான விலைவிகிதம் கொண்ட ஒப்பந்தப்புள்ளியை மன்றத்தின் முடிவிற்கு அனுப்ப உள்ளுர் ஒப்பந்தப்புள்ளி குழு பரிந்துரை செய்துள்ளது.

**அலுவலக குறிப்பு:-**

அ) மேற்கண்ட பணிக்கு வரப்பபெற்ற இரண்டு ஒப்பந்பதபுள்ளியில் குறைவான விலை கோரியுள்ள K.A.R. கண்ஸ்டிரக்ஸன்ஸ், தேனி ஒப்பந்ததாரரின் அலுவலக மதிப்பீட்டை விட 4.84% கூடுதலான விலைவிகதம் கொண்ட ஒப்பந்தப்புள்ளியை முடிவு செய்வது தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் பொறியியல் கையேடு பத்தி 2.7.2-ன் படி நகர்மன்றத்தின் வரம்பிற்கு உட்பட்டு இருப்பதாலும், தற்போது நகராட்சியின் நிதி ஆதாரத்தினை பெருக்கிடும் வகையில் வணிக வளாகம் அமைத்திட வேண்டியதன் அவசியம் கருதியும் மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) மேற்கண்ட பணிக்கு ஒப்பந்ததாரர் கோரியுள்ள கூடுதல் விலை விகிதத்தினால் ஏற்படும் கூடுதல் செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். /2018/இ1)

**தீர்மான எண். 566 அ, ஆ. அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் 03</u>:**

தேனி - அல்லிநகரம் நகராட்சி வீரப்ப அய்யனார் கோவில் குடிநீர் திட்டத்திற்கு 30HP சப்மெர்சபல் மோட்டார் சப்ளை செய்தல் பணிக்கு ரூ.5.20 (ரூ. ஐந்து லட்சத்தி இருபதாயிரம் மட்டும்) நகர்மன்ற தீர்மான எண்.552 நாள் 23.05.2018-ல் மேற்படி பணிக்கு 29.05.2018-ல் நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் கீழ்க்கண்டவாறு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியில் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி கோரிய தொகை (ரூபாய்.) | மதிப்பீட்டை விட கூடுதல் / குறைவு சதவீதம் |
|---|---|---|---|
| 1 | திரு.டி.தவமணி | 4,52,578.00 | 0.03% குறைவு |
| 2 | திரு.எஸ்.மாணிக்கம் | 4,64,890.00 | 2.69% கூடுதல் |

**<u>அலுவலக குறிப்பு :</u>**

அ) மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளியில் குறைவான விலை கோரியுள்ள திரு.டி.தவமணி 0.03% ஒப்பந்ததாரரது ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) குடிநீர் விநியோகம் அவசரம் அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.1906 /2018/இ2)

**<u>தீர்மான எண். 567 அ, ஆ. அனுமதிக்கப்பட்டது.</u>**

**<u>பொருள் 04</u>:**

தேனி - அல்லிநகரம் நகராட்சி வார்டு எண்.12 காந்திநகர், குறிஞ்சி நகர், வள்ளி நகர் மற்றும் திட்டச்சாலை ஆகிய இடங்களில் உள்ள வார்வுகளுக்கு தொட்டி அமைத்து மேல்மூடி போடுதல் பணிக்கு பணிக்கு ரூ.1.40 (ரூ. ஒரு லட்சத்தி நாற்பதாயிரம் மட்டும்) நகர்மன்ற தீர்மான எண்.550 நாள் 23.05.2018-ல் மேற்படி பணிக்கு 29.05.2018-ல் நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் கீழ்க்கண்டவாறு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியில் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி கோரிய தொகை (ரூபாய்.) | மதிப்பீட்டை விட கூடுதல் / குறைவு சதவீதம் |
|---|---|---|---|
| 1 | திரு.டி.தவமணி | 1,23,149.13 | 0.05% குறைவு |
| 2 | திரு.எஸ்.மாணிக்கம் | 1,24,000.35 | 0.64% கூடுதல் |

**<u>அலுவலக குறிப்பு :</u>**

அ) மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளியில் குறைவான விலை கோரியுள்ள திரு.டி.தவமணி 0.05% ஒப்பந்ததாரரது ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) குடிநீர் விநியோகம் அவசரம் அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.1904 /2018/இ2)

**<u>தீர்மான எண். 568 அ, ஆ. அனுமதிக்கப்பட்டது.</u>**

## <u>பொருள் 05</u>:

தேனி - அல்லிநகரம் நகராட்சி புதிய பேருந்து நிலையத்தில் மூன்று இடங்களில் தண்ணீர்த்தொட்டி வைத்து தண்ணீர் வசதி செய்தல் பணிக்கு ரூ.2.00 (ரூ. இரண்டு லட்சம் மட்டும்) நகர்மன்ற தீர்மான எண்.551 நாள் 23.05.2018-ல் மேற்படி பணிக்கு 29.05.2018-ல் நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் கீழ்க்கண்டவாறு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியில் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| **வ. எண்.** | **ஒப்பந்ததாரர் பெயர்** | **ஒப்பந்தப்புள்ளி கோரிய தொகை (ரூபாய்.)** | **மதிப்பீட்டை விட கூடுதல் / குறைவு சதவீதம்** |
|---|---|---|---|
| 1 | திரு.டி.தவமணி | 1,55,496.25 | 0.08% குறைவு |
| 2 | திரு.எஸ்.மாணிக்கம் | 1,58,292.00 | 1.71% கூடுதல் |

**<u>அலுவலக குறிப்பு :</u>**

அ) மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளியில் குறைவான விலை கோரியுள்ள திரு.டி.தவமணி 0.08% ஒப்பந்ததாரரது ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) குடிநீர் விநியோகம் அவசரம் அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.1905/2018/இ2)

**<u>தீர்மான எண். 569 அ, ஆ. அனுமதிக்கப்பட்டது.</u>**

## <u>பொருள் 06</u>:

தேனி-அல்லிநகரம் நகராட்சிக்குட்பட்ட காமராஜ் அம்மா உணவகம், காமராஜ் பேருந்து முனையம், நகராட்சி அலுவலக குடியிருப்பு வார்டு எண்.9, அம்பேத்கார் தெற்குத்தெரு, ஒண்டி வீரன் காலனி, நகராட்சி தாய் சேய் நல விடுதி, நகராட்சி துவக்கப்பள்ளி, அல்லிநகரம், நகராட்சி அலுவலகம், கர்னல் ஜான் பென்னி குவிக் பேருந்து நிலையம் மற்றும்

பழைய தாலுகா அலுவலக சாலை ஆகியவற்றில் பொதுமக்கள் பயன்பாட்டிற்காக அமைக்கப்பட்டுள்ள குடிநீர் சுத்திகரிப்பு கருவிகள் அவ்வப்போது ஏற்படும் பழுதுகளை சரி செய்து ஆண்டு பராமரிப்பு பணி செய்ய ஆகும் உத்தேச செலவினம் ரூ.9.00 லட்சம் (ரூபாய் ஒன்பது லட்சம் மட்டும்) மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு** :

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட செலவினத்தை நகராட்சி குடிநீர் நிதியில் செலவிடலாம்.
3. குடிநீர் விநியோக அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதை மன்ற அனுமதிக்கலாம்.

(ந.க.எண். /2018/இ2)

**தீர்மான எண். 570 1, 2 மற்றும் 3 அனுமதிக்கப்பட்டது.**

## பொருள் 07:

இந்நகராட்சி பொது சுகாதார பணிக்கு சாக்கடை கால்வாய்கள், கழிப்பறைகள் (கோவில்கள்) வழிபாட்டுத்தளங்கள் ஆகியவற்றில் உள்ள கிருமிநாசிகளை அழிப்பதற்கு பிளிச்சிங் பவுடர் பயன்படுத்தப்பட்டு வருகிறது. மேலும் டெங்கு காய்ச்சல் தடுப்பு பணிக்கு கொசுப்புழுக்களை அழிப்பதறகு வீடு வீடாக சென்று தொட்டிகளில் பிளிச்சிங் பவுடர் பயன்படுத்தப்பபட்டு வந்தது. இந்நிலையில் பிளிச்சிங் பவுடர் இருப்பில் குறைவாக இருப்பதால் மேற்படி பணிக்கு தேவையான பிளிச்சிங் பவுடர் 1000 கிலோ தமிழ்நாடு மல்டிபர்பஸ் இண்டஸ்ட்ரியஸ் கோ-ஆப் சர்வீஸ் திருச்சி நிறுவனத்திடமிருந்து வாங்குவதற்கும், அதற்கான உத்தேச செலவினம் ரூ.50,000/-க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு** :

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பொது சுகாதார பணியினை கருத்தில் கொண்டு தனி அலுவலரின் முன் அனுமதி பெறப்பட்டு மேற்காணும் நிறுவனத்திற்கு விநியோக உத்தரவு வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 2961 /2017/எச்1)

**தீர்மான எண். 571 1, 2. அனுமதிக்கப்பட்டது.**

## பொருள் 08:

தேனி-அல்லிநகரம் நகராட்சி பழனிசெட்டிபட்டி நீரேற்று நிலையம், குன்னூர் குடிநீர்த்திட்டம் மற்றும் வீரப்ப அய்யனார் கோவில் குடிநீர் திட்டங்களுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கும் பொருட்டு அதற்கு தேவையான குளோரின் கேஸ் கலந்து குடிநீர் விநியோகம் செய்வதற்கான குளோரின் கேஸ் வாங்குவதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.8.00 லட்சம் (ரூபாய் எட்டு லட்சம் மட்டும்) மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு</u>** :

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட செலவினத்தை நகராட்சி குடிநீர் நிதியில் செலவிடலாம்.
3. குடிநீர் விநியோக அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதை மன்ற அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 2050/2018/இ2)

**<u>தீர்மான எண். 572 1, 2 மற்றும் 3. அனுமதிக்கப்பட்டது.</u>**

## <u>பொருள் 09</u>:

தேனி – அல்லிநகரம் நகராட்சி 2015-16-ம் ஆண்டு உட்கட்டமைப்பு இடைவெளி நிரப்பு நிதியின் கீழ் ரூ:25.00 லட்சம் மதிப்பீட்டில் Bio-Digester மற்றும் சமுதாய சமையலறை கூடம் அமைத்திட அனுமதிக்கப்பட்டு பணி முன்னேற்றத்தில் உள்ளது.

| வ.எண். | பணியின் பெயர் | மதிப்பீடு (ரூ.லட்சத்தில்) |
|---|---|---|
| 1 | தேனி – அல்லிநகரம் நகராட்சி அல்லிநகரம் சமுதாய கழிப்பிடத்தில் Bio-Digester மற்றும் சமுதாய சமையலறை கூடம் அமைத்தல் | ரூ: 25.00 |

மேற்கண்ட பணியில் சமையலறை கூடத்தின் தரைக்கு Ceramic Tiles பதித்தல், Stove Platform பகுதியில் Granite Stone பதித்தல், 10 எண்ணிக்கை பொருத்துதல், சமையலறை முன் பகுதியில் பயனாளிகள் அமரும் வகையில் மேற்கூரை அமைத்தல், தண்ணீர் வசதி உள்ளிட்ட மேற்கொள்ள வேண்டியது அவசியமானதாக உள்ளது. மேலும் மேற்கண்ட பகுதியில் காய்கறிகடைகள் அதிகமாக உள்ளதால் காய்கறி கழிவுகளை அரைத்து மறுசூழற்ச்சி செய்து எரிவாயு தயாரிக்கும் வகையில் Vegetable Grinding Machine பொருத்த வேண்டியது இன்றியமையானதாக உள்ளது.

எனவே மேற்கண்ட பணியினை முழுமையாக முடித்து பயன்பாட்டிற்கு கொண்டு வரும் பொருட்டு தேவைப்படும் மேற்கண்ட கூடுதல் பணிகளை மேற்கொள்ளவும், மேலும் மேற்கண்ட பணியினை மதிப்பீட்டு தொகைக்கு மிகாமல் சேமிப்பு தொகையில் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>** :-

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) தேவைப்படும் கூடுதல் மதிப்பீட்டு தொகைக்கு மிகாமல் சேமிப்பு தொகையில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 1295/2017/இ1)

**<u>தீர்மான எண். 573 1, 2. அனுமதிக்கப்பட்டது.</u>**

## <u>பொருள் 10</u>:

தேனி – அல்லிநகரம் நகராட்சி 2018-19-ம் ஆண்டு பொது நிதியில் ரூ:9.80 லட்சம் (ரூபாய்: ஒன்பது லட்சத்து என்பது ஆயிரம் மட்டும்) மதிப்பீட்டில் தேனி – அல்லிநகரம் நகராட்சி வார்டு எண்:29 சுப்பன் தெரு பூக்கடை தெருவிற்கு கிழக்குபுறமுள்ள குறுக்குத் தெருக்களில் மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் அமைத்திட நகர்மன்ற தீர்மானம் எண்: 508 நாள்: 16-04-2018-ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்கண்ட பணிக்கு 27-04-2018 அன்று நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் வரப்பெற்ற கீழ்க்கண்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| **வ. எண்.** | **ஒப்பந்ததாரர் பெயர்** | **ஒப்பந்தப்புள்ளி கோரிய தொகை தொகை (ரூபாய்.)** | **மதிப்பீட்டை விட கூடுதல் / குறைவு சதவீதம்** |
|---|---|---|---|
| 1 | M/s.வேல்மணி கண்ஸ்டிரக்ஸன்ஸ், ஆண்டிபட்டி | ரூ: 8,54,546.00 | 0.42% குறைவு |
| 2 | திருமதி.T.தவமணி | ரூ: 10,10,860.00 | 17.80% கூடுதல் |

**<u>அலுவலக குறிப்பு</u> :-**

அ) மேற்கண்ட பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளியில் குறைவான விலை விகிதம் கோரியுள்ள M/s.Velmani Constructions, ஆண்டிபட்டி ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) அவசர அவசியம் கருதி தனிஅலுவலரின் முன்அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்: 1467 / 2018 / இ1)

**<u>தீர்மான எண். 574 அ, ஆ. அனுமதிக்கப்பட்டது.</u>**

**தனி அலுவலர் மற்றும் ஆணையர்(பொ)**
தேனி-அல்லிநகரம் நகராட்சி